# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,480 –1965 අගෝස්තු 13 වැනි සිකුරාදා—1965.8.13

14,480 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 432 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாதுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 431 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

நி. செ. இல. 1052 எப் (f) 102/6 சீ.ச.

### குடிமதிப்புக் கட்டளைச் சட்டம்

குடிமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (143 ம் அத்தியாயம்) 3 ம் பிரிவின் கீழ் நிதி அமைச்சர் குடி மதிப்புப் புள்ளிவிபர அதிபர் திரு. ஆர்தர் ராஜகுமார் ரத்னவேல் அவர்களைக் குடிமதிப்பு அத்தியட்சராக நியமித்துள்ளார்.

ஹெ. ஜினதாச சமரக்கொடி,
நிதி அமைச்சரின் நிரந்தரக்
காரியதரிசி.

கொழும்பு,
27.7.1965.
8-275.

---

### சம்பளச் சபைச் சட்டம்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 30 ம் பிரிவின் பிரகாரம், காரீயத்தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள், தொழில், தொழில் வசதி, வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு விட்டனவென்று மேற்கூறிய சட்டத்தின் 29 (3) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1965 ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 1 ம் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

எ. ஒ. வீரசிங்க,
தொழில், தொழில் வசதி, வீடமைப்பு
அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்து மீ 4 ந் உ.

#### அட்டவணை

காரீயத்தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1945 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24 ந் தேதி வெளிவந்த 9,453 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு 1948 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ந் திகதி வெளிவந்த 9,914 ம் இல. வர்த்தமானியிலும், 1950 ம் ஆண்டு ஜூன் மாதம் 23 ந் திகதி வெளிவந்த 10,113 ம் இல. வர்த்தமானியிலும், 1951 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதி வெளிவந்த 10,263 ம் இல. வர்த்தமானியிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதி வெளிவந்த 10,542 ம் இல. விசேட வர்த்தமானியிலும் 1961 ம் ஆண்டு யூலை மாதம் 28 ந் தேதி வெளிவந்த 12,562 ம் இல. வர்த்தமானியிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் " வருடாந்த விடுமுறைகள் (25 ம் பிரிவு) " என்னும் தலைப்பின் கீழ் அவ்வட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய தீர்மானங்களைச் சேர்த்துக்கொள்வதாலும் மாற்றப்படுகின்றன :—

" அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு)

9. (அ) இப்பந்தியினதும் 10 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் சகல வேலையாளருக்கும் (177 ம் அத்திபாயமாகிய) , விடுமுறைச் சட்டத்தின் கருத்துக்கமைய பின்வரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன் அனுமதித்தல் வேண்டும் :—

(1) தமிழ் தைப்பொங்கல் தினம் ;

(2) சுதந்திர ஞாபகார்த்த தினம் (பெப்ரவரி 4) ;

(3) சிங்கள, இந்து புத்தாண்டு தினம் ;

(4) மே தினம் (மே 1 ந் தேதி) ;

(5) சிங்கள விசாக மாதத்தின் பௌர்ணமி தினம் ;

(6) முகம்மத் நபிகள் பிறந்த தினம் (மீலாத் உன் நபி, சல்) ;

(7) நத்தார் தினம்.

(ஆ) இப்பந்தியின் (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறை ஒன்று, ஒரு வேலையாளர், வேலைநிறுத்தம் செய்யும் காலமொன்றில் நிகழுமாயின், அவ்வுபபந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய வேலையாளருக்குப் பொருந்தா.

(இ) முற்போந்த (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒரு வேலையாளருக்குக் கொடுபடவேண்டிய வேதனம் அத்தகைய விடுமுறைவரும் மாதத்தின் சாதாரண வேலை நாளொன்றுக்குக் கொடுபடவேண்டிய கீழெல்லைச் சம்பள வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

10. ஆயினும், ஒரு முதலாளி, பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, முற்போந்த பந்தியிற் குறிக்கப்பட்ட அத்தகைய அரசாங்க விடுமுறையெதிலும் வேலையாளரெவருக்கும் வேலை கொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைக்குப்பின் அடுத்துவரும் டிசெம்பர் மாதத்தில் 31 ம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு நாள் அவ்வேலையாளருக்கு விடுமுறையாகக் கொடுககப்படவேண்டும். அந்நாள், அப்பதில் விடுமுறை கொடுக்கப்படும் மாதத்தில் ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லை நாளாந்தரச் சம்பள வீதத்திற்குக் குறையாத வீதப்படி வேதனத்துடன் கொடுக்கப்படவேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறையெதினும், செய்யும் வேலைக்கு ஒரு சாதாரண வேலை நாள்கொண்ட மணிநேரங்களிற் செய்யும் வேலைக்குக் கொடுபடவேண்டிய கீழெல்லை நாளாந்தர வீதச் சம்பளத்தின் இருமடங்குக்குக் குறையாத வேதனமும், சாதாரண வேலை, நாளகொண்ட மணிநேரங்களின் தொகைக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணி நேர வேலைக்கும் (கீழெல்லை நாளாந்தர வீதத்தை 8 ற் பிரிக்க வரும்) சாதாரண மணி நேர வீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத வேதனமும் (அத்தகைய மணி நேரத்தின் பகுதியிற் செய்யும் வேலைக்குத் தகவுப் பொருத்தப்படி சம்பளமும்) அத்தகைய வேலையாளருக்குக் கொடுக்கப்படவேண்டும். ”

8–355

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

தீப்பெட்டிகள் சம்பந்தமாக (நானாவித பொருள்கள்) விலைக்கட்டுப்பாட்டதிகாரியாலாக்கப்பட்டு 1965 ம் ஆண்டு யூலை 23 ம் தேதிய 14,459 ம் இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை வர்த்தக, வியாபார அமைச்சர் அங்கீகரித்துள்ளாரென (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (7) ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. ரீ. ஈ. ஏ. த பொன்சேக்கா,
நிரந்தரச் செயலாளர்,
வர்த்தக, வியாபார அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 3 ந் உ.

8–322

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## அம்பாரை மாவட்ட கிராமசேவகர் பிரிவு புனர்நிர்மாணம்

அம்பாரை மாவட்ட பரிபாலன எல்லைக்குட்பட்ட சம்மாந்துறைப் பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் 79 ம் இலக்க, கிராமசேவையாளர் பிரிவையுடையதுமான " ஜே " பிரிவு என்னும் பெயரைக் கொண்ட ஒரு புதுக் கிராமச்சேவையாளர் பிரிவு 1/8/1965 ம் திகதி தொடக்கம் உருவாக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. " ஜே " பிரிவு என்னும் புதிய கிராமசேவையாளரின் பிரிவுக்குப்பட்ட பகுதிகள்.

(i) அம்பாரை கல்முனை துணைக் கடப்பு வீதிக்கும், 129, 132, 139, 135, 137, 141, 143, 145, 146, 147, ஆகிய கண்டங்களுக்குத் தெற்கே செல்லும் தொடு பாதைக்கும் சம்மாந்துறைப்பட்டின விஸதரிப்புத் திட்ட 138 ம் இலக்கத்தைக் கொண்ட 16.2. 1959 ல், சி. பி. ஓ. வின் படத்தில் காட்டப்பட்டுள்ள 147–150, கண்டங்களுக்கும் இடையே உள்ள தொரு பாதைக்கும் தெற்கே உள்ள பகுதி.

(ii) அம்பாரை கல்முனை வீதிக்கும், அம்பாரை கல்முனை துணைக் கடப்பு வீதிக்கு தெற்கேயும், உடங்காவீதிக்கு கிழக்கேயும் உள்ள " ஜே " பிரிவு குடியானவர் விஸ்தரிப்புத் திட்டப்பிரதேசத்தின் பகுதி.

3. இப்புதுக் கிராமச்சேவையாளரின் பிரிவில், நீதிபரிபாலனத்துக்குரிய பொலிஸ், கிராமந்திரக்கோடும், பொலிஸ் நிலையமும், மற்றும் இப் பிரிவுக்கான பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுப்பகுதி, பாராளுமன்றத் தேர்தல் பகுதி, உள்ளூராட்சி ஸ்தாபனங்கள் முதலிய விபரங்கள் பின்வருமாறு:

| பொலிஸ்கோடு | கிராமந்திரக்கோடு | பொலிஸ்நிலையம் | பிறப்பு இறப்பு விவாகப் பதிவுப் பகுதி | பாராளுமன்ற தேர்தல் பகுதி | ஸ்தலஸ்தாபனங்கள் |
|---|---|---|---|---|---|
| கல்முனை .. | சம்மாந்துறை .. | சம்மாந்துறை .. | பிறப்பு இறப்பு : சம்மாந்துறைப் பிரிவு .. | பொத்துவில் .. | சம்மாந்துறை கிழக்கு கி. சபை |
| | | | விவாகப்பதிவு : சம்மாந்துறைப் பற்று | | 2. சம்மாந்துறை பட்டின சபை |

கச்சேரி,
அம்பாரை மாவட்டம்,
உகனை, 3.8.65.

ஆர். ஜீ. ஜீ. ஓ. குணசேகரா,
அம்பாரை மாவட்ட அரசாங்கதிபர்.

8–262.

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3. 30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3. 30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.